பக்கங்கள்: 10
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 16 திங்கட்கிழமை 29.03.2021 கதிர் 12

## மூன்றாவது உறுப்பினருக்கும் யாழ். மாநகரசபையில் தொற்று

யாழ்.மாநகரசபையைச் சேர்ந்த மற்றுமொரு உறுப்பினர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை முதல்வர் முதலில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தொற்றாளராக அடையாளம் 2

# அதிகாரப் பகிர்வு என்கிற போர்வையில் பிரிவினைக்கு சில நாடுகள் முயற்சியாம்



## அவற்றின் புவிசார் நலனுக்கான திட்டம் எனக் கோட்டா காட்டம்

கொழும்பு,மார்ச்29

**இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்கிற பெயரில் பிரிவினையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது புவிசார் நலன்களை மற்றைய நாடுகள் அடைய முயற்சிப்பதற்கு இடமளிக்கமாட்டோம் என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.** 3

## இலங்கைத் தமிழ் மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!

### செல்வம் எம்.பி. வலியுறுத்து

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை அரசினால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டமை போல் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மீனவர்களையும் உடன் விடுதலை செய்ய இலங்கை,இந்திய அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்ட 2

## தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்புபட்டால் உடனடியாகக் கைது



### அரசுத் தரப்பில் அறிவிப்பு



கொழும்பு,மார்ச்29

தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட எவரேனும் இலங்கையில் செயற்பட்டாலோ அல்லது இலங்கைக்கு வருகை தந்தாலோ அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கர 2

## பன்மைத் தன்மையை ஏற்காமல் ஒருபோதும் இலங்கை தேசத்தை கட்டியெழுப்ப முடியாது

### சிங்களப் பிரமுகர்கள் கூட்டத்தில் மனோ கணேசன் இடித்துரைப்பு




இலங்கையின்பன்மொழி, பல்லின, பன்மத, பன்மைத் தன்மையை புரிந்துக் கொண்டு இலங்கையை ஒரு பன்மைத்தன்மை கொண்ட நாடாக ஏற்காமல் இலங்கை தேசத்தை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. சிங்களம் மட்டும், பௌத்தம் மட்டும் என்ற அடிப்படைகளில், தம்மை இரண்டாம், மூன்றாம் பிரஜைகளாக நிலை நிறுத்தும் நிலைமையை தமிழர்கள் ஒருபோதும் ஏற்க போவதில்லை என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற 2

## சிங்கள – பௌத்த மக்களே அரசை துரத்தியடிப்பார்கள்

### சஜித் அணி எச்சரிக்கை




ஜனநாயகக் கொள்கைக்கு முரணாகச் செயற்படும் நாட்டை சர்வதேசம் புறக்கணிக்கும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு இனியாவது விளங்கிக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு சுட்டிக்காட்டினார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன. 3

## யாழ். பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு பீடங்கள்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக மேலும் இரண்டு பீடங்களை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்திய அலகு, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆகிய இரண்டையும் பீடங்களாகத் தரமுயர்த்துவதற்குக் கடந்த வருடம் யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன் துணைவேந்தரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் கடந்த 2

## மாகாண சபைத் தேர்தல் இவ்வாண்டில் இல்லை

கொழும்பு,மார்ச்29

மாகாணசபை முறைமையை எந்த முறைமையில் நடத்துவது என்பது குறித்தும் தேர்தலை நடத்துவதற்கான காலப்பகுதி குறித்தும் இன்றைய தினம் கூடும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட இருந்ததாகவும், இந்தியா மற்றும் சர்வதேச தரப்பின் அழுத்தங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் ஆளும் கட்சியின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

எவ்வாறு இருப்பினும் கொவிட் – 19 நெருக்கடி நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் நிதி நெருக்கடிகள் காரணமாக இந்த ஆண்டில் தேர்தலை நடத்துவதில் சந்தேகம் உள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் உதய கம்பன்பில தெரிவித்துள்ளார். 2

## குடாநாட்டில் 1,500க்கும் அதிகமானோரின் தொற்றுச் சோதனை முடிவுக்குக் காத்திருப்பு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், மார்ச்28

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆயிரத்தி ஐந்நூறுக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு இன்று இரண்டு இடங்களில் பரிசோதனைகள் இடம்பெறுவதனால் இதன் பெறுபேறுகள் பரபரப்போடு எதிர்பார்க்கப்படுகின்றன. அவற்றில்ஒருபகுதிமுடிவு இன்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். நகர வர்த்தகர்களிடம் நேற்றைய தினம் பெறப்பட்ட 870 மாதிரிகள் பரிசோதனைக்காக முல்லேரியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதே போன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாற்பண்ணைப்பகுதி மக்களிடம் முத்துத்தம்பி பாடசாலையில் வைத்துப் பெறப்பட்ட 172 மாதிரிகளும், இன்று நகர வர்த்தகர்களிடம் பெற்ற 596 மாதிரிகளுமாக மொத்தம் 768 மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2

## இணையத்தள ஊடகம் நடத்திய இருவர் யாழ்ப்பாணத்தில் கைது

புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் யூடியுப் அலைவரிசை மற்றும் இணையத்தளம் ஒன்றை முன்னெடுத்து சென்றனர் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நகரில் இணையத்தளம் மற்றும் யூடீப் அலைவரிசை ஒன்றை நடத்திச் சென்ற இடம் அடையாளம் காணப்பட்டு அந்த 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மாகாண சபைத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் ஆராய்ந்து வருகின்ற நிலையில், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க உரிய தரப்பினருக்கு அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையிலும், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணையின் போது இலங்கை தொடர்பில் இந்தியா முன்வைத்துள்ள காரணிகள் குறித்தும் அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையிலும் இன்று கூடவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து தீர்மானம் ஒன்று எடுக்கப்படவிருந்தது.

குறிப்பாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்றால் விகிதாசார முறைமையில் நடத்துவதா அல்லது தொகுதி வாரி முறைப்படி தேர்தலை நடத்துவதா என்ற சிக்கல் நிலையொன்று நிலவுகின்ற பின்னணியில் அது குறித்தும், ஒரே நேரத்தில்சகலமாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதா அல்லது பகுதி பகுதியாக தேர்தலை நடத்துவதா என்ற காரணிகளையும் அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்படவிருந்ததாக ஆளும் தரப்பினர் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்நிலையில் மாகாணசபை தேர்தலை நடத்தும் அரசாங்கத்தின் ஏற்பாடுகள் குறித்து அமைச்சரவை ஊடகப்பேச்சாளர் உதய கம்மன்பில விடம் வினவியபோது அவர் கூறியதாவது:–

நாடாளுமன்றத்தில் இது குறித்த தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

தேர்தல் சட்ட திருத்தங்கள் செய்து கொள்ளப்பட வேண்டியுள்ளன. அத்துடன் நாட்டில் இன்னமும் கொவிட் – 19 வைரஸ் நிலைமைகள் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. அதேபோல் தேர்தலை நடத்துவதாயின் அதிகளவில் பணம் ஒதுக்க வேண்டும். அதற்கும் அரசாங்கம் தற்போது தயாரில்லை. எனவே இவ்வாறான நெருக்கடிகளில் உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமானதா என சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாகணசபைத் தேர்தல் முறையாக நடத்தப்பட்டிருக்குமாயின் இப்போது நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்திருக்காது. ஆனால் ஜனநாயகம் என கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அவர்களின் ஆட்சியில் மக்களின் வாக்குரிமையை பறித்துள்ளனர். எவ்வாறு இருப்பினும் இந்த ஆண்டில் தேர்தல் நடத்தப்பட வாய்ப்புகள் இல்லை, அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் தேர்தலை நடத்த அதிக வாய்ப்புகள் உள்ளன. – என அவர் கூறினார்.

## யாழ். பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாக இயங்கி வந்த சித்த வைத்தியத் துறையை சித்த வைத்திய பீடமாக மாற்றுவதற்கும், கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை சேர். பொன் இராமநாதன் நிகழ்த்துகை மற்றும் கட்புல கலைகள் பீடமாக உருவாக்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இணையத்தள ஊடகம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம் இன்று சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அந்த இடத்துக்கு பொறுப்பாக இருந்த 35 வயது பெண் ஒருவர் மற்றும் 36 வயது ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 05 கணினிகள் மற்றும் 05 மடிக்கணினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டில் 1,500.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம் போதனா வைத்திய சாலையில் பெறப்படும் மாதிரிகளும் போதனா வைத்தியசாலையில் பரிசோதனை செய்யப்படுவதனால் அதிக மாதிரிகள் இன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படுத்த வேண்டியுள்ளன. இதனால் இன்றைய தினம் நகர வர்த்தகர்களிடம் பெறப்பட்ட மாதிரிகள் நாளைய தினமே பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் எனக் கருதப்படுகின்றது.

இதேநேரம் யாழில் இருந்து வவுனியா செல்லும் பயணிகள் தாண்டிக்குளம் பகுதியில் வழி மறிக்கப்பட்டு அவர்களிடமும் பி.சி.ஆர். மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.

இவை யாவற்றினதும் பெறுபேறுகள் மாவட்டத்தின் இயல்பு நிலைமையிலும் தாக்கம் செலுத்தும் என்பதனால் இப்பெறுபேறுகள் அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்றன.

இன்றைய தினம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பரிசோதனைகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் சோதனைகள் முன்னெடுக்கப்படவில்லை. இன்றும் அந்நிலைமை தொடருகின்றது.

## பன்மைத் தன்மையை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் வாழும், கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர்களின், ஜனநாயகத்துக்கான ஆனந்தியர்கள் என்ற அமைப்பு நேற்றிரவு நடத்திய இணையரங்கத்தில் கலந்து கொண்டு சிங்கள மொழியில் உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைக் கூறினார். மனோ மேலும் கூறியவை வருமாறு:–

ஆனந்த கல்லூரி இலங்கையின் புகழ் பெற்ற சிங்கள பௌத்த கல்வி நிறுவனம். இலங்கையின் பிரபல சிங்கள அரசியல் நண்பர்களை உருவாக்கிய கல்லூரி இதுவாகும். ஆகவே இதன் பழைய மாணவர்களாகிய நீங்கள், இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவோம் என்ற நிகழ்வை நடத்துவது சாலப்பொருத்தமானது.

இலங்கையில் சிங்கள மொழி பேசுகின்றவர்கள், பௌத்த மதத்தைப் பேணுகின்றவர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மை. அதில் எமக்கு பிரச்சினை இல்லை. அதுபற்றி உண்மையில் நான் மகிழ்கிறேன். ஆனால், இந்த சிங்கள, பௌத்தம் மட்டும் இலங்கை அல்ல. எழுபத்தி ஐந்து என்பது நூறு அல்ல. தொண்ணூற்று ஒன்பது கூட நூறு அல்ல. எழுபத்தி ஐந்துடன் இன்னொரு இருபத்து ஐந்து சேர வேண்டும். அதுதான் நூறு. அதுதான் இலங்கை.

ஆகவே இலங்கை நாட்டின் தேசியத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால், நம் நாட்டின் பன்மைத் தன்மையை முதலில் நீங்கள் ஏற்க வேண்டும். இதுதான் ஐக்கிய இலங்கைக்கான முதல் நிபந்தனை.

தமிழர்களுக்கு அதிகாரம் பிரித்து கொடுத்தால், அவர்கள் தனியொரு நாட்டை அமைத்துக்கொண்டு போய் விடுவார்கள் என்ற பயம் சிங்கள மக்களுக்கு இருக்கிறது. தமிழர் மத்தியில் ஆயுதப் போராட்டம் மீண்டும் தலையெடுக்கும் என்ற பயமும் இருக்கிறது. மிக நியாயமான பயங்கள் இவை. சிங்களவர் ஏன் இப்படி நினைக்கிறார்களே என சில தமிழ் அரசியல்வாதிகள் கூறுவதுண்டு. நான் அவர்களிடம், இல்லை, அவர்களின் இந்த பயம் நியாயமானது. அதை நாம் நிவர்த்திப்போம் என்று கூறுகிறேன்.

அதேபோல் தமிழர் மத்தியிலும் பயங்கள் உண்டு. இந்த நாட்டை சிங்கள மட்டும், பௌத்தம் மட்டும் என படிப்படியாக மாற்றியமைக்க சிங்கள அரசியல்வாதிகள் முயல்கிறார்கள் என்று தமிழர்கள் நினைக்கிறார்கள். தமிழரை, முஸ்லிம்களை இரண்டாம், மூன்றாம் பிரஜைகளாக நடத்த சிங்கள அரசியல் தலைமை முயல்கிறது என்ற அச்சம் தமிழர் மத்தியில் உள்ளது. இதுவும் மிக, மிக நியாயமான பயம். இதை சிங்கள மக்கள் நிவர்த்தி செய்ய வேண்டும்.

அப்புறம் இந்த அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தை பாருங்கள். அதிகாரப் பகிர்வு என்றால், சிங்கள மக்களின் அதிகாரத்தை பிடுங்கி எடுத்து, தமிழ் அரசியல்வாதிகளிடம் கையளிப்பது என சிங்கள மக்கள் நினைக்க வைக்கப்பட்டுள்ளார்கள். முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் கையளிப்பது என சிங்கள மக்கள் நினைக்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

இது அப்பட்டமான பிழை. அதிகார பகிர்வு என்றால் சிங்கள அதிகாரத்தை தமிழ், முஸ்லிம்களிடம் கையளிப்பது என்பதல்ல. அது ஒரு ஜனநாயக சித்தாந்தம். கொழும்பில் குவிந்துள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கு, மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்ப வேண்டும் என்றால், அவை வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல, மஹியங்கனை, மொனராகலை, காலி, மாத்தறை, எம்பிலிபிடிய ஆகிய சிங்கள பிரதேசங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும்.

உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? கொழும்பு தலைநகரில் ஒரு கும்பல் இருக்கிறது. அது ஒரு வகுப்பு. கொழும்பில் எந்த அரசாங்கம் நிலைபெற்றாலும், அந்த கும்பல் அந்த அரசாங்கத்தை பிடித்து கொள்கிறது. வாக்களித்து அரசாங்கங்களை உருவாக்கும் மக்களைவிட இந்தக்கும்பல் அரசாங்கங்களுக்கு உள்ளே செல்வாக்கு மிக்கது.

இது எல்லா அரசாங்கங்களையும் பிடிக்கும். இப்போதைய அரசாங்கத்தையும் இது பிடித்து வைத்துள்ளது. சேனநாயக்க, பண்டாரநாயக்க, விக்கிரமசிங்க, ராஜபக்ஷ அரசுகள் மட்டுமல்ல, நாளை சஜித் ஆட்சி வந்தாலும், அந்த அரசாங்கத்தை இது பிடிக்கும். அந்தளவு செல்வாக்கு இந்த கும்பலுக்கு உள்ளது. இதற்கு இன, மத அடையாளங்கள் இல்லை. ஆகவேதான், அதிகாரங்களை பிரித்து எல்லா மாகாணங்களுக்கும் அனுப்ப வேண்டும் என நான் கூறுகிறேன். ஆகவே அதிகாரப் பகிர்வை இந்த அடிப்படையில் பாருங்கள்.

மேலும் இது என்ன, மன்னராட்சியா? இங்கு அரண்மனை உள்ளதா? கொழும்பில் ராஜா, ராணி, யுவராஜா, யுவராணி இருக்கிறார்களா? ராஜகுடும்பம் உள்ளதா? ஆகவே கொழும்பில் குவிந்துள்ள அதிகாரங்களை பிரித்து எல்லா தமிழ், சிங்கள, முஸ்லிம் பிராந்தியங்களுக்கு அனுப்ப வேண்டும். இவற்றையெல்லாம் புரிந்துக்கொள்ளுங்கள். இலங்கை தேசத்தை கட்டியெழுப்பலாம். நான் இரண்டு கைகளையும் உயர்த்தி யாருக்கு வேண்டுமானாலும் ஆதரவு தருகிறேன். – என்றார்.

## தடை செய்யப்பட்ட.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளமை, இஸ்லாமிய பயங்கரவாத கொள்கையை பரப்புகின்றமை மற்றும் அவர்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றமை போன்ற காரணங்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என அரசு தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இலங்கை விவகாரங்களில் கண்காணித்து செயற்பட்டு வருகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் தனிப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழ் உறுப்பினர்கள் உட்பட 400 இற்கும் அதிகமானவர்களின் பெயர்களையும் இலங்கை அரசு தடை செய்துள்ளது.

இந்தத் தடைக்கான காரணம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் அரசின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர்.

## இலங்கைத் தமிழ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 54 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு அவர்கள் இரண்டு தினங்களில் படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்களின் விடுதலைக்காக இந்திய தூதரகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தமை பாராட்டத்தக்கது.

ஆனால் இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி குற்றச்சாட்டில் பிடிபட்டு இந்திய சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பெரும்பான்மை இன மீனவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்காக இலங்கை அரசாங்கமும், இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களை விடுதலை செய்கின்றனர்.

ஆனால் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களையும், அவர்களின் மீன் பிடி உடமைகளையும் இன்று வரை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை அரசாங்கம் தமிழர்களின் விடயம் என்ற வகையில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. அவர்களும் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடுதலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாட அனுமதிக்கப்படக் கூடாது. எனவே தமிழராக உள்ள மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் இலங்கை அரசாங்கமும் தமிழ் மீனவர்களை விடுதலை செய்வதற்கான ஒரு முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

எங்கு பார்த்தாலும் இன ரீதியான ஒடுக்குமுறையை இலங்கை அரசாங்கம் செய்து வருகின்றது. குறிப்பாக எல்லை தாண்டி போகின்ற எமது மீனவர்கள் இன்றைக்கும் சிறைகளில் வாடிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் வேண்டும் என்று எல்லை தாண்டிச் செல்வதில்லை.

எனவே அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை யாரும் செய்யவில்லை. நாங்களும், அமைப்புக்களும் மீனவர்களை விடுதலை செய்யக் குரல் கொடுக்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை. எனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மீனவர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்து நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## மூன்றாவது.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரும் அவருடைய மனைவியும் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டவர்களில் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரும் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள - பௌத்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீது முன்னெடுக்கப்படும் இனவாதச் செயற்பாடுகளை அரசு தொடருமாயின் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் ஆட்சி முறைமையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை ஒரு நாட்டை அங்கீகரிக்கும். அந்தவகையில் இலங்கை ஜனநாயக நாடு என்ற நிலைப்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாடு ஜனநாயகக் கொள்கைக்கு முரணாகச் செயற்படும்போது சர்வதேசம் கேள்வி எழுப்பும். இதற்குப் பதிலளிக்க வேண்டியது ஆட்சியில் உள்ள அரசின் பொறுப்பாகும்.

இவ்விடயத்தில் இறையாண்மை என்பதைக் கூறி சர்வதேசத்தை வெறுக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பல விடயங்களை உணர்த்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு காலத்தில் இருந்து இலங்கை விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது .

இலங்கைக்கு எதிராக ஆரம்பத்தில் இருந்து செயற்பட்ட நாடுகள் இம்முறையும் இலங்கைக்கு எதிராகவே செயற்பட்டுள்ளன.

ஆனால், கடந்த வருடம் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகள் இம்முறை இலங்கை விவகாரத்தில் அமைதி காத்துள்ளமை குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் குறித்து முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் இறுதிப்போரில் இடம்பெற்றவை எனக் குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

மாறாக கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து அதிகளவு அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகம் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட மனித அடக்குமுறை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்தல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்டு தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, தமிழ் சமூகத்தினர் மீது வெறுப்பூட்டும் பேச்சுக்கள் ஆகியவற்றை பிரதானமாகக் குறிப்பிட வேண்டும்.

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணாகச் செயற்படும் நாட்டை சர்வதேசம் புறக்கணிக்கும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு இனியாவது விளங்கிக் கொள்ள வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்குடன் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் மீது தொடரும் அடக்குமுறைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தனி சிங்கள மக்களின் ஆட்சியை அமைத்துள்ளோம் என்று பெருமிதம் கொள்ளும் அரசை சிங்கள – பௌத்த மக்களே இனிப் புறக்கணிப்பார்கள் – என்றார்.

## அதிகாரப் பகிர்வு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களுடனான உரையாடல் நிகழ்ச்சியில் மக்கள் முன் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். மாத்தறை மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் இந்த நிகழ்வு நேற்று நடந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இந்தியா அதற்கு ஆதரவாக வாக்களிக்காத போதும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற மேற்கு நாடுகளின் கோரிக்கையை ஆதரித்துப் பேசியமை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடக்கும் வல்லரசுகளின் அதிகாரப் போட்டியில் சிக்கிக்கொள்ள இலங்கை விரும்பவில்லை என்று அந்த நிகழ்வில் கூறிய கோட்டாபய, நாட்டின் இறைமைக்கு துரோகம் இழைக்க முடியாது என்றார்.

ஜெனிவா சவாலை எந்தவித அச்சமும் இன்றி எதிர்கொள்வோம். அழுத்தங்களுக்கு அடிபணியமாட்டோம். இது சுதந்திரமடைந்த நாடு. இந்துமா கடலில் நடக்கும் வல்லரசுகளின் போட்டிக்கு இரையாகமாட்டோம்.– என்று அவர் மேலும் தெரிவித்தார்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619, 076 973 4611** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடைப் பிரகடனம் ஏன்?

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பார்கள்.

'கெடுகுடி சொற்கேளாது' என்றும் கூறுவர்.

அத்தகையோரை நீங்கள் திருத்த முடியாது. எத்தகைய நல்லாலோசனைகளையும் அத்தகையோர் ஏற்கார்.

சேற்றுக்குள் சிக்கியவன் அதிலிருந்து மீளுவதற்கு வெளியில் இருக்கும் ஒரு கொளுகொம்பைப் பற்றி மேலெழ வேண்டும். அதை விடுத்து சேற்றிலிருந்து வெளியேறும் எத்தனமாக சேற்றை மேலும் மேலும் அழுத்தி எம்ப முயற்சித்தால் அது பலனளிக்காது. மேலும் சேற்றுக்குள் புதையும் வேலையாகத்தான் அது இருக்கும்.

கெடுகுடி போல செயற்படும் இலங்கை அரசும் அப்படித்தான் கெடுபிடியாக நடந்து கொள்கின்றது.

இலங்கை தொடர்பில் காட்டமான தீர்மானம் ஒன்றை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் நிறைவேற்றியுள்ள நிலையில், தமிழர்களின் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் முந்நூறுக்கும் மேற்பட்ட பிரமுகர்களைத் தடை செய்யும் பிரகடனத்தை இலங்கை வெளியிட்டிருக்கின்றது.

யுத்த காலத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் ஆக்கபூர்வமான எத்தனங்களுக்கு நெற்றியடியாக ஆப்பு வைக்கும் வேலையே இது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தாம் வகித்த பங்குக்காக போர்க் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருக்கும் மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவே, நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் என்ற முறையில் இந்தத் தடை பிரகடனத்தை வெளியிட்டிருக்கின்றார்.

இப்படி யுத்தக் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர் அக்குற்றச்சாட்டுக்களை அம்பலப்படுத்தக் கூடிய அமைப்புகளைத் தடை செய்வதன் தாற்பரியம் வெளிப்படையாகப் புரிந்து கொள்ளத்தக்கதே.

கனேடியத் தமிழ் எம்.பியான கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளமை போல –

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தான் அடைந்த பெரும் பின்னடைவுத் தோல்வியில் இருந்து கவனத்தைத் திசை திருப்புவதற்காக இலங்கை அரசு இந்தத் தீச்செயலை முன்னெடுக்கின்றது. தீய நோக்குள்ள இந்த நடவடிக்கை – மாற்றுக் கருத்துக் கொண்டோருக்கு எதிரான இந்தச் செயற்பாடு – நேர்மையாகப் பணியாற்றும் சில தமிழ் அமைப்புகளையும் கனேடியத் தமிழர்களையும் களங்கப்படுத்துகின்றது என அவர் கூறுவது உண்மைதான்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் தான் முன்னெடுத்த பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியிலான மேலாண்மைப் போக்கு பெரும் பின்னடைவைக் கண்டுள்ள நிலையில், அதன் விளைவை – பெறுபேறை – சந்திக்க இயலாத ஆற்றொணாத் தன்மையில் (Desperate) இவ்வாறு பல பிரதிபலிப்புகளைக் கொழும்பு காட்டத் தொடங்கியிருக்கின்றது என்பது திண்ணமே.

முன்னைய நல்லாட்சி அரசு தமிழர் தரப்புடன் நல்லிணக்கத் தீர்வு ஒன்றை எட்டுவதற்காகத் தமிழர் பக்கத்தில் எந்தெந்த அமைப்புகளுடன் ஊடாட்டங்களை ஆரம்பித்ததோ, அந்தந்தத் தரப்புகளை எல்லாம் தடை செய்யும் பட்டியலில் சேர்ந்திருக்கின்றது கோட்டாவின் மூர்க்கத்தனமான ஆட்சிப் பட்டாளம்.

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானத்தை அடுத்து, இலங்கைக்கு எதிரான கடும் நடவடிக்கைகளுக்கு சர்வதேசம் தயாராகி வருகின்றது. பல மேற்கு நாடுகளும் ஒரே சமயத்தில் கொழும்புக்கு எதிரான பிரதிபலிப்புகளைக் காட்டக் கூடிய ஏது நிலைகள் தென்படுகின்றன.

அச்சமயத்தில் புலம்பெயர் தேசங்களில் தமிழர் நலன் பேணும் அமைப்புகள் கொழும்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதை இத்தகைய தடை நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்தி அடக்கலாம் எனக் கொழும்பு கனவு காண்கின்றது.

பொறுப்புக் கூறல் கடப்பாட்டை இலங்கை நிறைவேற்றவே மாட்டாது என்பதுடன் பிற தரப்புகளின் தலையீட்டுடன் அந்தப் பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் முயற்சி எடுக்கப்பட்டாலும் அதை முறியடிப்பதிலேயே கொழும்பு முனைப்பாக இருக்கும் என்பதை வெளிப்படுத்தும் முதல் சமிக்ஞையாக இந்தத் தடை அறிவிப்பைக் கொள்ள முடியும்.

அப்படித் தடை போட்டு முட்டுக் கட்டை போட்டு குழப்புவதில் கொழும்பு அதி தீவிரமாகவும், குறியாகவும் இருக்கும் என்பது உறுதி. அதற்கும் காரணம் உண்டு.

இலங்கையில் பொறுப்புக் கூறல் சரியாகவும், நேர்மையாகவும், நீதியாகவும் நடைமுறைப்படுத்தப்படுமானால், அந்த வகையில் முதல் சிக்கப் போகின்ற சுறாக்கள்தான் இப்போது ஆட்சி அதிகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது வெளிப்படையான உண்மை.

அதனால்தான் எப்பாடுபட்டேனும் பொறுப்புக் கூறல் செயற்பாடு நடைமுறைக்குக் கொண்டு வருவதைக் குழப்புவதில் கொழும்பு குறியாக நிற்கின்றது. அதில் ஒன்றுதான் இந்தத் தடை பிரகடனமாகும்.

# பயங்கரவாதத்துக்கு எதிராகக் குரல் எழுப்பிய அஸாத் ஸாலி அந்தச் சட்டத்தின் கீழ் கைது!

### ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் சட்டமா அதிபருக்குக் கடிதம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி அனைத்து வகையான பயங்கரவாத செயற்பாடுகளுக்கும் எதிராகக் குரல் எழுப்பியவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தெரிவித்துள்ளது.

எனவே அவர் மீதான விசாரணையில் அவர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டால் உடனடியாக விடுதலை செய்யுமாறும் அந்த கவுன்ஸில் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதமொன்றையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் காணப்படும் ஒரு சில பயங்கரவாதிகள் உட்பட அனைத்து வகையான பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும் எதிராக அஸாத் ஸாலி குரல் எழுப்பியவர் என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம் இளைஞர்கள் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குத் தள்ளப்படுவது தொடர்பாக நாட்டின் கவனத்தை ஈர்த்த ஒரு சில முஸ்லிம் தலைவர்களில் அஸாத் ஸாலியும் ஒருவர் எனவும் இது தொடர்பாகப் பலதடவை பாதுகாப்பு தரப்பினருக்கு அசாத் ஸாலி எழுதியுள்ளமையுடன் செய்தியாளர் மாநாடுகளிலும் கருத்து வெளியிட்டுள்ளார் என முஸ்லிம் கவுன்ஸில் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டுள்ளமை முஸ்லிம் சமூகத்துக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பயங்கரவாதத்தைக் கண்டித்தமையுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து சஹ்ரான் மீது முதலில் குற்றச்சாட்டை சுமத்தியவர் அஸாத் ஸாலி எனவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாகப் பொலிஸ்மா அதிபர் பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொண்டு அஸாத் ஸாலி குற்றமற்றவர் என்பது உறுதியானால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என முஸ்லிம் கவுன்ஸில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# கிட்டு பூங்காவுக்கு நல்லூரில் தீ வைப்பு!



நல்லூர் கிட்டுப் பூங்காவின் முகப்பின் அடையாளமாகக் காணப்பட்ட கொட்டகை விஷமிகளால் தீவைத்து நாசமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்பு படைக்கு அறிவிக்கப்பட்ட போதும் வாகனம் மற்றோர் இடத்தில் சேவையில் ஈடுபட்டு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது.

அதனால் நல்லூர் கிட்டு பூங்காவின் முகப்புப் பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

# இலங்கைக்கு கிடுகுப் பிடி கண்காணிக்க செயலகம்

ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை செயற்படுத்த சிறப்பு அலுவலகம் அமைக்க மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் முடிவு செய்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பண்டைய தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிப்பதும், நாட்டில் தற்போதைய மனித உரிமை பிரச்சினைகளை கண்காணிப்பதும் இதன் முக்கிய நோக்கம்.

ஜெனிவா வட்டாரங்களின்படி, இதற்காக 2 கோடியே 80 லட்சம் அமெரிக்க டொலர் ஒதுக்கப்படும்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து மீறப்படுமானால், ஏதாவது ஒரு நாடு அதற்கு எதிராக வழக்கு தொடுக்கத் தேவையான ஆதாரங்களை தேடி வழங்க இந்த அலுவலகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயலகம் விசாரணையாளர்களாகச் சட்டத்தரணிகளைக் கொண்டிருக்கும்.

உருவாக்கப்படவுள்ள இந்த செயலகம் உலகளாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்தும் நாடுகள் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களைச் சேகரிக்கும்.

இதன் காரணமாக இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட படைத்தரப்பினர் வெளிநாடுகளில் கைது செய்யப்படலாம் வெளிநாட்டு நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம்.

இலங்கையின் யுத்தத்துடன் தொடர்புபட்ட அரசியல் தலைவர்களும் வெளிநாடுகளில் கைதுசெய்யப்படலாம்.

# ஓய்வூதிய வயதெல்லை தனியாருக்கு இனி 60!

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதை 60 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அதுதொடர்பான சட்டமூலத்தை மேலும் ஆய்வுக்குட்படுத்தும் பேச்சு எதிர்வரும் முதலாம் திகதி தொழில அமைச்சில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பேச்சில் அமைச்சின் அதிகாரிகளுடன் தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்கள் தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதானிகளும் பங்கேற்கவுள்ளனர் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொழில் ஆலோசனை சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் மேற்படி பேச்சில் சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச்சேவைகள் ஊழியர் சங்கம் ஆகியன பங்கேற்கவுள்ளன என சங்கத்தின் செயலாளர் அன்ரன் மார்க்கஸ் தெரிவித்துள்ளார்.

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதெல்லையை 60 ஆக அதிகரிப்பதற்குக் கடந்த வரவு – செலவுத் திட்டத்தின்போது அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் கடந்த 24 ஆம் திகதி தொழிற்சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் பெண்களின் ஓய்வூதிய வயதெல்லை 50 ஆகவும் ஆண்களின் ஓய்வூதிய வயதெல்லை 55 ஆகவும் இருக்கின்றது.

இலங்கையர்களின் ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டே ஓய்வூதிய வயதை அதிகரிப்பது காலத்திற்கு பொருத்தமானதென் பதை தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதேவேளை தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதிற்கு ஒரு முறையான கால எல்லை காணப்படவில்லை என்பதையும் அந்த நிறுவனங்கள் ஊழியர்களுக்கு வழங்கும் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வயதுக்கிணங்கவே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கிணங்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எவர் கிவன்’ கொள்கலன் கப்பல் மீட்பு!

ஏறக்குறைய ஒரு வாரமாக சூயஸ் கால்வாயின் குறுக்கே சிக்கித் தவிக்கும் ஒரு பெரிய கொள்கலன் கப்பல் கரையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

400 மீற்றர் நீளமுள்ள (1,300 அடி) எவர் கிவன் 80% சரி செய்யப்பட்டுள்ளதாக சூயஸ் கால்வாய் ஆணையம் தெரிவித்துள்ளது. படகை நகர்த்துவதற்கான மேலும் பல முயற்சிகள் இன்று மீண்டும் தொடங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

எவர் கிவன் உலகின் பரபரப்பான வர்த்தக பாதைகளில் ஒன்றைத் முடக்கிவைத்திருப்பதுடன் பல கப்பல் நிறுவனங்களின் கப்பல் பாதையை மாற்றும் அதே நேரம் மிகப்பெரும் கப்பல் போக்குவரத்து தேக்கத்தை ஏற்படுத்துகிறது.

கப்பல் விடுவிக்கப்பட்டதாக வெளியான தகவல்கள், கால்வாயின் போக்குவரத்து சில மணி நேரங்களுக்குள் மீண்டும் தொடங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல நாள்களாக தேங்கிக்கிடக்கும் 960 கோடி டொலர் மதிப்பான பொருள்களுக்கு ஒரு விடிவுகாலம் கிடைக்கின்றது.




மீட்புப் பணியாளர்கள் மற்றும் டச்சு நிறுவனமான ஸ்மிட் சால்வேஜ் கால்வாய் கரையில் இருந்து கப்பலை நகர்த்த அதிசக்தி வாய்ந்த இழுவை படகுகளைப் பயன்படுத்தினர் என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆரம்பத்தில் கரையிலிருந்து நான்கு மீற்றர் தொலைவில் இருந்த கப்பல் கடும் முயற்சியின் பின்னர் இப்போது 102 மீற்றர் தொலைவுக்கு நகர்த்தப்பட்டுள்ளதாக சூயஸ் கால்வாய் ஆணையம் தெரிவித்துள்ளது. கப்பலை முழுமையாக மிதக்கப் பண்ணும் முயற்சிகள் தொடங்கியுள்ளன.

அலை அதிகரித்தவுடன் உள்ளூர் நேரப்படி 11:30 மணிக்கு (09:30 GMT) கப்பல் நகர்த்துவதற்கான முயற்சிகள் மீண்டும் தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கால்வாயின் அகலமான பகுதியின் கப்பல் தரிப்பிடத்திற்கு மாற்றப்பட்டவுடன் போக்குவரத்து மீண்டும் தொடங்கும் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது. மொத்தமாக 367 கப்பல்கள் இந்தக் கால்வாயினை கடந்து செல்ல காத்திருக்கின்றன.

## எல்லையில் சொந்த மக்கள் மீது ராணுவம் குண்டு வீச்சு: நூற்றுக்கணக்கான மக்கள் தாய்லாந்துக்குத் தப்பி ஓட்டம்




உள்நாட்டில் கலவரம் வெடித்துள்ள மியன்மாரில், அந்நாட்டு இராணுவம் சொந்த மக்கள் மீதே குண்டு வீச்சு நடத்தியதால் ஆயிரக்கணக் கானோர் உயிரை காப்பாற்ற தாய்லாந்துக்கு ஓடி விட்டனர்.

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடும் மக்களை இராணுவம் இரும்புக் கரம் கொண்டு அடக்க முயன்று வருகிறது. கிழக்கு எல்லை யில் உள்ள முட்ரா மாவட்டத்தில் அரசுக்கு எதிரான இனக்குழுக்கள் போராட்டம் நடத்துகின்றன.

இந்த நிலையில் அந்த பகுதியில் மியன்மார் இராணுவம் தீவிர குண்டு வீச்சை நடத்தியது. அதைத் தொடர்ந்து 3 ஆயிரம் பேர் அங்கிருந்து தப்பி எல்லை கடந்து தாய்லாந்தில் அடைக்கலமாகி உள்ளனர். தாய்லாந்து அரசு வானொலி இதை உறுதி செய்துள்ளது.

## அமெரிக்காவில் சுற்றுலாப் பயணிகள் ஹெலிக்கொப்டர் விபத்து 5 பேர் பலி



அமெரிக்காவில் பனிப்பாறையில் ஹெலிக்கொப்டர் மோதி விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

அலாஸ்கா மாகாணத்தில் உள்ள எங்கரேஜின் என்ற இடத்தில் ஹெலிக்கொப்டரில் சிலர் சுற்றுலா வந்ததாகக் கூறப்படுகிறது. காற்றின் வேகம் மற்றும் பனிமூட்டம் காரணமாக திசை மாறிய அந்த ஹெலிக்கொப்டர் நிக் என அழைக்கப்படும் பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஹெலிக்கொப்டரின் பயணம் செய்த 5 பேர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் ஒருவர் படுகாய மடைந்துள்ளார். விபத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட பகுதிக்கு விமான போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

## இங்கிலாந்தில் மில்லியன்ஆண்டுகள் பழைமையான புதைபடிமத்தை கண்டுபிடித்த 6 வயது சிறுவன்!

இந்திய வம்சாவளியை சேர்ந்த இங்கிலாந்தில் வசித்து வரும் சித்தார்த் சிங் ஜமாத் என்ற பரம்பொருள் ஆராய்ச்சி ஆர்வம் கொண்ட 6 வயது சிறுவன். வால்செல் பகுதியில் மில்லியன் கணக்கான ஆண்டுகள் பழைமையான புதைபடிமத்தை விலங்கின் கொம்பு போன்ற ஒருதொன்மையான புதைபடிமத்தை தனது தந்தையுடன் சேர்ந்து கண்டுபிடித்துள்ளான்.



புழுக்களை தேடி ஈரமண்ணில் தான் குழி தோண்டிய போது இந்த கொம்பு கண்டெடுக்கப்பட்டதாக அவன் கூறியுள்ளான். இவனது தந்தை விஷ் சிங் பழம் பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஆவார்.

251 முதல் 458 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த விலங்கின் கொம்பு இது என அவர் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளார். பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் புவியியல் ஆய்வு பிரிவுக்கு தனது மகனின் கண்டுபிடிப்பை அனுப்பிவைக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



## ஆஸ்திரேலியாவின் இரு முக்கிய அமைச்சர்களின் பதவி பறிப்பு

ஆஸ்திரேலிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் லிண்டா ரெனால்ட்ஸ், அட்டர்னி ஜெனரல் கிறிஸ்டியன் போர்ட்டர் ஆகியோர் மீதான கற்பழிப்பு குற்றச்சாட்டுகள், அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

அவர்களுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. பல்லாயிரக்கணக்கான பெண்கள் வீதிக்கு வந்து போராடியதால் அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குற்றச்சாட்டில் சிக்கிய 2 அமைச்சர்களையும் அமைச்சரவையில் இருந்து நீக்கி பிரதமர் ஸ்காட் மாரிசன் உத்தரவிட்டுள்ளார். உள்துறை மந்திரி பீற்றர் தட்டனுக்கு பாதுகாப்புத் துறை கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்து.

அமைச்சரவை மறுசீரமைப்பின்போது பெண்களுக்கான தொடர்ச்சியான பதவி உயர்வுகளையும் பிரதமர் அறிவித்தார். ஆஸ்திரேலிய அமைச்சரவையில் இதுவரை இல்லாத அளவுக்கு பெண்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஹோலி பண்டிகை:

## பாகிஸ்தான் இந்துக்களுக்கு இம்ரான்கான் வாழ்த்து



வண்ணங்களின் பண்டிகையான ஹோலி பண்டிகை உலகம் முழுவதும் உள்ள இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தீமையை நன்மை வெற்றி கொண்டதன் நினைவாக கொண்டாடப்படும் இந்த பண்டிகையின்போது மக்கள் ஒருவர் மீதொருவர் வண்ணப்பொடிகளை தூவி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த ஆண்டுக்கான ஹோலி பண்டிகை இன்று (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. நேற்று ஹோலிகா தகான் கொண்டாட்டங்கள் நடந்தன.

ஹோலி பண்டிகையை முன்னிட்டு பாகிஸ்தானில் உள்ள இந்துக்களுக்கு அந்த நாட்டு பிரதமர் இம்ரான்கான் வாழ்த்து தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்ட வாழ்த்துச்செய்தியில், ‘நமது இந்து சமூகத்தினருக்கு வண்ணங்களின் பண்டிகையாம், ஹோலி பண்டிகை வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரித்துக்கொள்கிறேன்’ என்று குறிப்பிட்டு உள்ளார்.

## அமெரிக்க துணை ஜனாதிபதியும் ஹோலி பண்டிகை வாழ்த்து தெரிவிப்பு



வண்ணங்களின் பண்டிகையான ஹோலி பண்டிகை உலகம் முழுவதும் உள்ள இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தீமையை நன்மை வெற்றி கொண்டதன் நினைவாக கொண்டாடப்படும் இந்த பண்டிகையின்போது மக்கள் ஒருவர் மீதொருவர் வண்ணப்பொடிகளை தூவி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த ஆண்டுக்கான ஹோலி பண்டிகை இன்று (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. நேற்று ஹோலிகா தகான் கொண்டாட்டங்கள் நடந்தன.

இந்நிலையில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் இந்திய மக்களுக்கு ஹோலி பண்டிகை வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில், இனிய ஹோலிபண்டிகை வாழ்த்துக்கள்! நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்கள் மீது வீசப்படும் துடிப்பான வண்ணங்களுக்கு ஹோலி மிகவும் பிரபலமானது. மகிழ்ச்சி நிறைந்த ஹோலி என்பது எங்கள் வேறுபாடுகளை ஒதுக்கி வைப்பது மற்றும் ஒன்றாக இணைந்திருப்பது பற்றிய நேர்மறை எண்ணங்களை கொண்டது. இந்த கடினமான காலங்கள் உலகெங்கிலும் உள்ள சமூகங்களால் உருவான ஒரு செய்தி என்று பதிவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா - அமெ. கூட்டு கடற்படைப் பயிற்சி இரண்டு நாள்கள் நடைபெறுகின்றது



இந்தியா – அமெரிக்கா நாடுகளுக்கிடையிலான கூட்டு கடற்படைப் பயிற்சி, கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் நேற்று தொடங்கியது. இரு நாடுகளிடையே வளர்ந்து வரும் பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில் இரண்டு நாள் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

'பஸெக்ஸ்' என்ற இந்த கூட்டுப் பயிற்சியில் இந்தியா சார்பில் 'ஷிவாலிக்' போர்க் கப்பலும், நீண்டதூர கண்காணிப்புப் போர் விமானமான 'பி8ஐ' யும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா, யு.எஸ்.எஸ்.தியோடோர் ரூஸ்வெல்ட் போர் விமானம் தாங்கிக் கப்பல் குழுவை பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளது.

இதுகுறித்து இந்திய கடற்படை செய்தித்தொடர்பாளர் ஒருவர், 'இந்தக் கூட்டுப் பயிற்சியில் முதன் முறையாக இந்திய விமானப்படை போர் விமானங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அமெரிக்கக் கப்பல் படையுடன் இணைந்து கூட்டுப் பயிற்சி மற்றும் அனுபவத்தை பெறும் வகையில் இந்திய விமானப் படைக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லொய்ட் அஸ்டின் கடந்த வாரம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட நிலையில், இந்தக் கூட்டு கடற்படை பயிற்சியை இரு நாடுகளும் தொடங்கியுள்ளன. அவருடைய பயணத்தின்போது, இந்தோ – பசுபிக் பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இரு நாடுகளிடையேயான பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என்று இரு தரப்பிலும் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேளாண் துறையில் நவீன முறைகள் அவசியம் வானொலி உரையில் பிரதமர் மோடி வலியுறுத்து



'வேளாண் துறையில் நவீனமயமாக்கல் என்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும்' என பிரதமர் மோடி அறிவுறுத்தி இருக்கிறார். 'மன் கீ பாத்' நிகழ்ச்சியின் மூலம் வானொலியில் நாட்டு மக்களிடையே நேற்று உரையாற்றியபோதே பிரதமர் மோடி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

'உலகிலேயே மிகப் பெரியளவில் கொரோனா தடுப்பு மருந்து வழங்கும் பணி இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கண்டிப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும். தொடக்கத்தில் இருந்தே இந்திய மக்கள் கொரோனாவுக்கு எதிராக உற்சாகமான போரை நடத்தி உள்ளனர்.

'வேளாண் துறையில் நவீன நடைமுறைகளை பின்பற்றுவது இன்றியமையாதது. வாழ்க்கையின் ஒவ்வொரு புதிய அம்சத்திலும் நவீனமயமாக்கல் என்பது அவசியமாகும். இந்தியாவின் வேளாண் துறையில் நவீனமயமாக்கல் என்பது காலத்தின் கட்டாய தேவையாகும். இதில் ஏற்கனவே காலதாமதமாகி விட்டது. நாம் ஏற்கனவே நிறைய நேரத்தை இழந்து விட்டோம்.

'வேளாண் துறையில் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கும் பாரம்பரிய வேளாண் நடைமுறைகளுடன் புதிய மாறுதல்கள் மற்றும் புதுமைகளையும் சமமாகப் பின்பற்ற வேண்டும் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வெண்மைப் புரட்சியின்போது நாடு இதனை அறிந்துள்ளது. தற்போது தேனீ வளர்த்தல் என்பதும் அத்தகைய ஒரு மாற்றாக உருவாகி வருகிறது.

'புதிய வேளாண் சட்டங்கள் மூலமாக முதலீடுகளைக் கொண்டு வருவதோடு நவீன நடைமுறைகளைப் பின்பற்றவும் முடியும். விவசாயப் பொருள்களை நாட்டின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் விவசாயிகள் எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியும். இதன் மூலமாக விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும்' என்று தனது உரையில் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# மராட்டியத்தில் கொரோனாத் தொற்று அதிகரிப்பு தடுப்பதற்கு புதிய சட்ட நடைமுறைகள் அமுல்

மகாராஷ்டிராவில் பொது இடங்களில் எச்சில் துப்பினாலோ முகக் கவசம் அணியாவிட்டாலோ அபராதம் விதிக்க அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து சரிவை நோக்கிச் சென்ற கொரோனாத் தொற்று எண்ணிக்கை கடந்த சில நாள்களாக நாடு முழுவதும் உச்சம் பெற்று வருகிறது. மகாராஷ்டிராவில் மீண்டும் அதிக பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டு வருகின்றன. அங்கு மொத்த பாதிப்பு 25.64 லட்சம் என்ற எண்ணிக்கையைக் கடந்துள்ளது.

மகாராஷ்டிராவில் தொற்று அதிகரிப்பினைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, 'பொது இடங்களில் முகக் கவசம் அணியாமல் காணப்படும் எந்த நபருக்கும் 500 ரூபா அபராதமும் பொது இடங்களில் யாரேனும் எச்சில் துப்புவது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு 1,000 ரூபா அபராதமும் விதிக்கப்படும்' என அரசால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்கரை மற்றும் பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களை இரவு 8 மணி முதல் காலை 7 மணி வரை மூடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனை மீறுபவர்கள் தலா 1,000 ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும் அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்று அதிகரிப்பினை முன்னிட்டு அங்கு திரையரங்குகள், விடுதிகள், உணவகங்கள் ஆகியவை கொரோனா பாதுகாப்பு வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அரசு உத்தரவிட்டுள்ளது. நாக்பூர் மாவட்டத்தில் கடந்த 15 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஒரு வார கால ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 50 ஆண்டு கால ஆட்சிகளால் மக்களுக்கு பயனேதுமில்லை!

## நாம் தமிழர் பிரசாரத்தில் சீமான் குற்றச்சாட்டு



'தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஊழல், லஞ்சம் போன்றவை தொடரும்' என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஊழல் நிறைந்திருப்பதாகவும் ஊழல், லஞ்சம் போன்றவற்றை ஒழிப்பதற்காக தமது கட்சி தீவிரமாகச் செயற்படும் எனவும் உறுதியளித்தார். கடந்த 50 ஆண்டு கால ஆட்சிகளால் மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'ஈழத்தில் தமிழரின் 60 ஆண்டு கால கனவை காங்கிரஸும் தி.மு.கவும் கைகோர்த்து அழித்தன' என்றும் சீமான் தனது பிரசாரத்தின்போது குறிப்பிட்டார்.

# கொரோனா பாதிப்பால் ஒரே நாளில் 312 பேர் மரணம் 2021 இன் ஒரேநாளிலான அதிகபட்ச இழப்பு இதுவாகும்



*இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வரும் நிலையில், இந்த ஆண்டில் முதல் முறையாக ஒரு நாளில் கொரோனாவால் பலியானவர்களின் எண்ணிக்கை 300 ஐத் தாண்டியுள்ளது.*

*தொடர்ந்து 18 ஆவது நாளாக நேற்றும் கொரோனா வைரஸ் பாதிப்பு மற்றும் பலி எண்ணிக்கை அதிகரித்தது. 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 62,714 பேர் புதிதாக வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே நேரம் ஒரே நாளில் 312 பேர் பலியாகியுள்ளனர்.*

*இந்த ஆண்டில் ஒரே நாளில் கொரோனா இறப்பு எண்ணிக்கை 300 ஐக் கடப்பது இதுவே முதல் முறை என்பதோடு, கடந்த 3 மாதங்களில் ஏற்பட்ட அதிகபட்ச ஒரு நாள் இறப்பு எண்ணிக்கையும் இதுவாகும்*

# முதல் கட்டத் தேர்தல் மேற்கு வங்கத்தில் 84% வாக்குப்பதிவு பா.ஜ.க. ஆட்சி அமைவது உறுதி என்கிறார் அமித்ஷா

மேற்கு வங்க மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. மொத்தம் 30 தொகுதிகளில் நடந்த முதல் கட்ட தேர்தலில் 84.13 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்துள்ளது.

வாக்குப் பதிவு நிலைவரம் பற்றி தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஊடகங்களைச் சந்திக்கையில், "மேற்கு வங்கத்தில் அதிகபட்சமாக புர்பா, மெதினிப்பூர் மாவட்டத்தில் 86.32 சதவீத வாக்குகள் பதிவாகின. ஜார்கிராமில் 84.74, பஸ்சிம், மெதினிப்பூரில் 84.71, பன்குராவில் 84.27, புருலியாவில் 81.77 சதவீத வாக்குகள் பதிவாகின. இவை அண்ணளவான தகவல்கள்தான். இறுதிப் புள்ளிவிவரங்கள் விரைவில் வெளியிடப்படும். ஒரு சில வன்முறைச் சம்பவங்களை தவிர முதல் கட்ட வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடைபெற்றது" என்று தெரிவித்துள்ளனர்.

இந்த வாக்குப் பதிவு தரவுகள் பற்றி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா டெல்லியில் அளித்த பேட்டியில், "மேற்கு வங்கம், அசாமில் நடந்த முதல் கட்ட தேர்தலில் அதிகபட்ச வாக்குகள் பதிவாகி இருப்பது நல்ல அறிகுறி. மேற்கு வங்கத்தில் முதல்கட்டத் தேர்தல் நடந்த 30 தொகுதிகளில் 26 இலும் அசாமில் 47 இல் 37 தொகுதியிலும் பா.ஜ.க. வெல்லும். மேற்கு வங்கத்தில் 294 தொகுதிகளில் 200 இற்கும் மேல் வென்று பா.ஜ.க. ஆட்சி அமைப்பது உறுதி. அசாமிலும் பா.ஜ.க. ஆட்சி நிச்சயம் வரும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

பிரதமர் மோடி பங்களாதேஷுக்குச் சென்றது இரு தரப்பு உறவைப் பலப்படுத்தவே தவிர தேர்தலுக்காக அல்ல" என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

# வாக்களிப்பில் சாதனை படைக்க இளையவர்களுக்கு மோடி அழைப்பு!



'தகுதியுள்ள அனைவரும் வாக்களித்து சாதனை படைக்க வேண்டும்' என பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார். ஐந்து மாநில சட்டப்பேரவைகள் மற்றும் இடைத் தேர்தல்களை முன்னிட்டு வெளியிட்ட டுவிட்டர் பதிவிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மக்கள் திரண்டுவந்து வாக்களிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதிலும் குறிப்பாக இளம் வாக்காளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் மோடி தனது பதிவில் தெரிவித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



ஐ.நா.தீர்மானம் தொடர்பில்

# ஜனாதிபதி சிறந்த முன்னெடுப்புகளை மேற்கொள்கின்றார் கருணா புகழாரம்



ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றத்தினூடான சில தகவல்ளை அரசாங்கத்திற்கு தந்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக நாட்டின் ஜனாதிபதி சிறந்த முன்னெடுப்புகளை மேற்கொண்டிருக்கின்றார்.

எனவே சிறந்த முறையில் இந்த மாற்றங்களை உருவாக்கி மீண்டும் இந்த ஐரோப்பிய நாடுகளுடனான உறவுகளைப் பேணுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார் என கருணா என அழைக்கப்படும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் செங்கலடியில் இடம்பெற்ற தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் முடிவுற்ற தருவாயில் இருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தொடர்பான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தக் காலத்தில் கூட பாரிய நெருக்கடிகள் தரப்பட்டன. ஆனால், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனைச் சிறந்த முறையில் கையாண்டு முறியடித்துவிட்டார்.

ஆனால், தற்போதைய சூழலில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினை இரண்டு தரப்பும் இருந்து பேசித் தீர்க்க வேண்டிய ஒரு பிரச்சினை.

ஏனெனில் இலங்கை என்பது உண்மையில் நாணயம் மிக்க தனித்துவமான நாடு. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடாகவும் இருக்கின்றது.

அந்த வகையிலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றத்தினூடான சில தகவல்களை அரசாங்கத்திற்கு அவர்கள் தந்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக நாட்டின்ஜனாதிபதிசிறந்தமுன்னெடுப்புகளை மேற்கொண்டிருக்கின்றார்.

குறைந்தது ஆறு மாதத்திற்குள் நிறைவேற்றும்படி இந்தத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. எனவே ஜனாதிபதி சிறந்த முறையில் இந்த மாற்றங்களை உருவாக்கி மீண்டும் இந்த ஐரோப்பியநாடுகளுடனானஉறவுகளை சிறந்த முறையில் பேணுவதற்கான முயற்சிகளைமேற்கொள்வார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உண்மையில் சிறந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்காக நாடாளுமன்றத்தில் கூட விசேட ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்பட்டு அதனூடாக இன்று அனைத்துத் தரப்பினரும் விசாரிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவேஅரசியல்இலாபங்களுக்காக விரோதமான கருத்துக்களை முன்வைப்பதை விட சிறந்த ஒரு அரச கட்டமைப்பு அந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அதனூடாக சிறந்த முடிவுகள் வரும் என நினைக்கின்றேன் என்று தெரிவித்தார்.

## கிராமங்களை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் அக்கரைப்பற்றில் சிவில் குழுக்களை சந்தித்த பொலிஸ்

அக்கறைப்பற்று,மார்ச் 29

அக்கரைப்பற்று மற்றும் திருக்கோயில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக்குழு தலைவர்கள், செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மதகுருமார்களை அழைத்து 'கிராமங்களை பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் குற்றச் செயல்களில் இருந்து பிராந்தியங்களை பாதுகாப்பது சம்பந்தமாகவும் அதற்குரிய ஆலோசனைகளும் தீர்வுகளும் தொடர்பில் பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஏ.எஸ் கருநாரத்தவின் தலைமையில் நேற்று கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த ரத்நாயக்க மற்றும் அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எச்.பிரதீப் குமார, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார விஜயதுங்க, திருக்கோயில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திலகரத்ன மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு அமைப்பின் ஆலோசகர்கள் என பலரும் கலந்துகொண்டு தீர்மானங்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

## 33ஆவது மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் 33 ஆவது மாவட்ட மட்ட விளையாட்டு போட்டியை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் விளையாட்டுப் போட்டி அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்பீ.எம்.றியாத்தலைமையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று கயிறு இழுத்தல் மற்றும் எல்லே சுற்றுப் போட்டி நடைபெற்றது.

கழகங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் இறுதி சுற்றுப்போட்டியில் நியூ ஸ்டார் இளைஞர் கழக அணியும் அல் நஜா இளைஞர் கழக அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதில் வெற்றிபெற்ற நியூ ஸ்டார் இளைஞர் கழக அணி மாவட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இப்போட்டியில் இரண்டாம் இடத்தினை அல் நஜா இளைஞர் கழகம் பெற்று கொண்டது.

அத்துடன் கழகங்களுக்கிடையிலான எல்லே இறுதி சுற்றுப்போட்டியில் அல் அக்ஸா இளைஞர் கழக அணியும் அரபாத் இளைஞர் கழக அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இதில் வெற்றிபெற்ற அல் அரபாத் இளைஞர் கழகம் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இப்போட்டியில் அல் அக்ஸா இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தினை தக்கவைத்து கொண்டது.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் அலியார் முபாரக் அலி கலந்து கொண்டதுடன் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அஸ்வத் அலி உட்பட மேலும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## கலை ஆற்றல் உள்ளவர்களை சமூகத்திற்குக் கொண்டு வரும்

### 10 மாத பயிற்சிப் பட்டறை நிகழ்வு

மட்டக்களப்பு, மார்ச், 29

கிராம மட்டத்தில் இருக்கின்ற கலை ஆற்றலுள்ள இளையவர்களை சமூகத்திற்குக் கொண்டு வந்து அவர்களின் கலை ஆற்றலை மேம்படுத்துவதற்குமான 10 மாத பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது .

உலக நாடக தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இது நடத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படவுள்ள பயிற்சி பட்டறைக்கான ஆரம்ப நாள் நிகழ்வும் முன்னாயத்த விழிப்புணர்வு வீதி நாடகமும் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் மாவட்ட உதவிப் பணிப்பாளர் டி.ஈஸ்வரராஜா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்களான வி. தர்மரட்ணம் அருள்மொழி நிஷாந்தி கலாராணி ஜேசுதாசன் உட்பட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பிரதேச இளைஞர் யுவதிகளும் கலந்துகொண்டனர்.

## கொக்குவிலில் அங்கவீனமுடைய முதியவர் தூக்கிட்டு தற்கொலை

மட்டக்களப்பு,மார்ச் 29

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்குவில் முதலாம் குறுக்கு மட்டக்களப்பு எனும் முகவரியையுடைய ஒரு பிள்ளையின் தந்தையான 59 வயதுடைய சீனித்தம்பி யோகராசா என்பவர் அனைவரும் வீட்டில் நித்திரை செய்த பின்னர் வீட்டு வாசலில் உள்ள மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் நேற்றுஅதிகாலைசடலமாகமீட்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு பதில் நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம்ஒப்படைக்கும்படிஉத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மட்டக்களப்பில் தமிழரசின் தலைவர் கலந்துகொண்ட கலந்துரையாடல்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா மற்றும் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான முன்நகர்வுகள், மாவட்ட ரீதியில் கட்சி எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சமகால அரசியல் நிலைமைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் கட்சி ரீதியான செயற்பாடுகள் குறித்து தலைவர், பதில் பொதுச் செயலாளரினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் அங்கத்தவர்களின் கேள்விகளுக்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் முன்னாள் வடமாகாணசபை அமைச்சர் பா. சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், கனகசபை, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மா. நடராசா, மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர்கள், வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன், வாலிபர் முன்னணியினர், மற்றும் மகளிர் அணியினர், கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு






# விறுவிறுப்பாக 3ஆவது ஒருநாள் போட்டி இந்திய அணி 7 ஓட்டங்களால் வெற்றி!

இங்கிலாந்து அணியுடனான மூன்றாவதும் தொடரின் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், 7 ஓட்டங்களால் வென்ற இந்திய அணி 2 - 1என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியுள்ளது.


நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பிலீடுபட்டது. துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணிக்கு ரோஹித் ஷர்மாவும் ஷிகர் தவானும் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். ரோஹித் 37, தவான் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ரிஷப் பன்ட் 78, ஹர்திக் பான்ட்யா 64 ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கை 300ஐக் கடக்க உதவினர். ஆயினும், 48.2 ஓவர்களிலேயே 329 ஓட்டங்களைப் பெற்றவேளையில் சகல விக்கெட்டுக்களையும் இந்திய அணி இழந்தது. மார்க் வுட் 3, அடில் ரஷிட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. டேவிட் மலன் நிதானமாக 50 ஓட்டங்களைச் சேர்த்தார். இந்தியாவின் வெற்றி உறுதி என்றிருந்தபோது எட்டாவது துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய சாம் கரன் தனியாக நின்று போராடி 95 ஓட்டங்களைப் பெற்று போட்டியின் வெற்றி வாய்ப்பினை இங்கிலாந்துப் பக்கமாக நகர்த்த முயன்றார்.

இறுதி ஓவரில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் பந்து வீச அழைக்கப்பட்ட நடராஜன் 6 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுக்க இந்திய அணி 7 ஓட்டங்களால் இந்தப் போட்டியையும் தொடரையும் வெற்றிகொண்டது. சர்துல் தாகூர் 4, புவனேஷ்வர் குமார் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இங்கிலாந்தின் சாம் கரனும் தொடர் நாயகனாக அதே அணியின் ஜொனி பெயர்ஸ்டோவும் தெரிவானார்கள். இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட், இருபதுக்கு இருபது, ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர்கள் மூன்றையும் இந்திய அணி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமூக வலைத்தளங்களிலிருந்து வெளியேறுவதாக பிரான்ஸ் முன்னாள் கால்பந்து வீரர் அறிவிப்பு!



சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து நடைபெறும் நிறவெறித் தாக்குதலின் காரணமாக அவற்றிலிருந்து வெளியேறப் போவதாக பிரான்ஸ் கால்பந்து அணியின் முன்னாள் வீரர் ஹென்றி அறிவித்துள்ளார்.

ஆர்சனல், பார்சிலோனா போன்ற பல்வேறு முன்னணி அணிகளில் விளையாடியுள்ள முன்கள வீரரான ஹென்றி, பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளார். அவர் விளையாடிய அணிகளுக்கு கோப்பைகளை வெல்ல மிகப் பெரிய பலமாகவும் அமைந்தார்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக கோப்பைத் தொடரில் பிரான்ஸ் அணி கோப்பையை வெல்வதற்கு மிக முக்கியம் காரணமாக இவர் திகழ்ந்திருந்தார். பிரீமியர் லீக் வரலாற்றில் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவராகவும் ஹென்றி கருதப்படுகிறார். ஆர்சனல் அணியின் வரலாற்றில் மிக அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையும் இவரையே சேரும்.

கால்பந்தாட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இவர் பல சமூக அநீதிகளுக்கு எதிராகவும் குரல் எழுப்பியுள்ளார். குறிப்பாக நிறவெறித் தாக்குதல்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் மிக முக்கியமான பிரபலமாக இவர் இருந்துவந்துள்ளார்.

சமீபகாலமாக வீரர்கள் ஓரிரு ஆட்டங்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறும் பட்சத்தில் அவர்கள் மீது சமூக வலைத் தளங்களில் நிறவெறித் தாக்குதல்கள் நடத்துவது இயல்பான ஒன்றாக மாறிவிட்டது. பல்வேறு வீரர்கள் முன்வந்து இதற்கு கண்டனங்களைத் தெரிவித்தனர். நேரில் நிறவெறித் தாக்குதல் நடத்தும் நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் சமூக வலைத்தளங்களில் முகம் தெரியாத பலர் வீரர்கள் மீது நிறவெறித் தாக்குதல்களை நடத்துவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சமூக வலைத்தளங்கள் மூலம் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் யார் என்பதை அடையாளம் காண்பது காவல் துறையினருக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துவருகிறது.

எனவே இதற்கு உதவுமாறு பல்வேறு நாடுகளினதும் கால்பந்த லீக்குகள் சார்பாக சமூக வலைத்தளங்களுக்கு அண்மையில் வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆனால், அதற்கான முறையான பதில் இல்லாத காரணத்தால் அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில்தான் ஹென்றி தனது வெளியேற்ற அறிவிப்பை விடுத்துள்ளார். 'காப்புரிமம் போன்ற விடயங்களிலெல்லாம் கடுமையாக இருக்கும் சமூக வலைத்தளங்கள், நிறவெறித் தாக்குதல்களிலும் அவற்றைக் கடைப்பிடிக்காதது ஏனோ?' - என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார். இதற்குச் சரியான தீர்வு கிடைக்கும் வரையில் அனைத்து சமூகவலைத் தளங்களிலிருந்தும்தான் விலகுவதாக பகிரங்கமாக அவர் அறிவித்துள்ளார்.

# மியாமி ஓபின் டென்னிஸ் ஜேர்மனியின் ஸ்வெரேவ் அதிர்ச்சித் தோல்வி!

மியாமி ஓபின் டென்னிஸ் போட்டித் தொடரில், ஜேர்மனியின் அலெக்சாண்டா ஸ்வெரேவ் இரண்டாவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் ஆடவர் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் உலகின் 7 ஆம் நிலை வீரரான அலெக்சாண்டா ஸ்வெரேவ் 6 - 1, 3 - 6, 1 - 6 என்ற செட் கணக்கில் உலகின் 83 ஆம் நிலை வீரரான பின்லாந்தின் எமில் ரூசௌரியிடம் தோல்வி கண்டார்.

இந்தப் போட்டியின் மூலம் தனது டென்னிஸ் வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றியை சந்தித்துள்ள எமில், 'முதல் செட்டில் விளையாடியபோது நான் அசாதாரணமான நிலையில் இருந்தேன். அதனால் ஏராளமான தவறுகளைச் செய்தேன். ஆனால் 2 ஆவது செட்டில் மெதுவாக இயல்பு நிலைக்குத் திரும்பினேன்' என்று தெரிவித்துள்ளார். இவர் அடுத்து 3 ஆவது சுற்றில் சுவீடனின் வைமரை வீழ்த்தி நான்காம் சுற்றுக்குள் நுழைந்துள்ளார்.



போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் ரஷ்யாவின் டானியல் மெத்வடேவ் 6 - 2, 6 - 2 என்ற நேர் செட்களில் தாய்வானின் லூ யென் - சன்னை வீழ்த்தினார் ஙிஸ்திரேலியாவின் அலெக்ஸி போபிரின் தனது 2 ஆவது சுற்றில் 6 - 4, 6 - 2 என்ற நேர் செட்களில் அமெரிக்காவின் ரெய்லி ஒபேல்காவை வென்றார். மற்றொரு போட்டியில் பிரிட்டனின் கேமரூன் நூரி 7 - 5, 7 - 5 என்ற நேர் செட்களில் பல்கேரியாவின் கிரிகோா டிமிட்ரோவை வீழ்த்தி 3 ஆவது சுற்றை உறுதி செய்தார்.

மகளிர் ஒற்றையர் 2 ஆவது சுற்றில் ஜப்பானின் நயோமி ஒசாகா 7 - 6 (3), 6 - 4 என்ற நேர் செட்களில் அவுஸ்திரேலியாவின் அஸ்லா டொம்ஜனோவிச்சை வீழ்த்தி 3 ஆவது சுற்றை உறுதி செய்தார். உலகின் 6 ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 6 - 2, 6 - 1 என்ற நேர் செட்களில் சீனாவின் செங் சாய் சாயையும் ஸ்பெயினின் கார்பைன் முகுருஸா 6 - 4, 6 - 1என்ற நோ செட்களில் சீனாவின் வாங் ஜின்யூவையும் வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினா.



# லெஜெண்ட்ஸ் அணியில் விளையாடிய பத்ரிநாத்துக்கும் கொரோனா

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள் சச்சின் டெண்டுல்கர், யூசப் பதான் வரிசையில் சுப்ரமணியம் பத்ரிநாத்துக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி தனது டுவிட்டர் பக்கத்தில் பத்ரிநாத் பதிவிட்டிருக்கிறார். அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வந்ததாகவும் முறையாக பரிசோதனைகளும் மேற்கொண்டு வந்திருந்தாலும் தனக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'லேசான அறிகுறிகள் உள்ளன. நான் வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொண்டு, அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றி வருகிறேன். எனது மருத்துவர் அறிவுரையின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறேன்' என்றும் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். சச்சின் டெண்டுல்கர், யூசப் பதான் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது. அண்மையில் நடந்து முடிந்த வீதிப் பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடருக்கான இந்திய லெஜெண்ட்ஸ் அணியில் சச்சின், பதானுடன் இணைந்து பத்ரிநாத்தும் இடம்பெற்றிருந்தார். இந்த நிலையில், பத்ரிநாத்துக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளமை ஏனைய வீரர்களுக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

# இந்திய கால்பந்து அணித் தலைவர் சுனில் சேத்ரி கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைவு



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த இந்திய கால்பந்து அணியின் தலைவர் சுனில் சேத்ரி குணமடைந்ததாக அறிவித்துள்ளார். இவருக்கு கடந்த 11ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிகிச்சையில் இருந்த அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை தொற்று பாதிப்பிலிருந்து குணமடைந்ததாக தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஓமானுக்கெதிராக நடைபெற்ற சினேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் அணித்தலைவர் சுனில் சேத்ரி இன்றி 10 புது முக வீரர்களோடு களமிறங்கிய இந்திய அணி, 1 - 1 என்று போட்டியை சமன் செய்திருந்தமை கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜெனிவாத் தீர்மானத்தினால் இலங்கை உலகளாவிய சட்டவலைக்குள் சிக்கும்!

## கலாநிதி தயான் ஜயதிலக்க எச்சரிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் பிரித்தானிய தலைமையிலான ஆறு நாடுகளால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் உலகளாவிய ரீதியிலான சட்டவலையொன்று உருவாக்கப்படவுள்ளது என்று கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா.தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சாட்சியங்களை திரட்டுவதற்கும் பாதுகாப்பதற்குமான 12 பேர் கொண்ட குழு, ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தினுள் ஒரு நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கான குணாம்சங்களுடனான பாத்திரத்தை வகிக்கவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை, இலங்கையில் மனித உரிமைகள், மனிதாபிமானக் குற்றச்சாட்டுக்கு இலக்கான தனிநபர்களை இலக்கு வைத்து வெளிநாடுகளில் வழக்கு தொடுப்பதற்கு வழிசமைப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் கடந்த 23 ஆம் திகதி நிறைவுக்கு வந்திருந்தது. இதன்போது இலங்கை தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும், இலங்கை அரசாங்கம் அத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்து விட்டது.

இவ்வாறான நிலையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அடுத்தகட்டச் செயற்பாடுகள் எவ்வாறிருக்கப்போகின்றன என்பதுதொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலிருந்து வேறுபட்டதாக உள்ளது.

தீர்மானத்தின் தலைப்பு, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றுதல் என்றவாறு அமைந்திருக்கின்றது. இதில் ஆறாவது செயற்பாட்டுப்பந்தியில், பொறுப்புக்கூறலை முன்னேற்றும் நோக்கத்துடன், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அத்துமீறல்கள் அதனுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பாக சான்றுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்து பாதுகாத்தல், பாரிய மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மோசமான மீறல்கள் என்பவற்றின் பொறுப்புக்கூறலுக்கான எதிர்காலத் திட்டங்களுக்கான சாத்தியமான மூலோபாயங்களைத் தயாரிப்பதற்கும் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பொறிமுறை 12 பேர் கொண்ட உலகின் தலைசிறந்த நிபுணர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

### சட்டமா அதிபரின் பாத்திரம்

இலங்கை தொடர்பான கண்காணிப்பு மீளாய்வுக் காலம் ஆறுமாதங்களாகக் சுருக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தினுள் இந்தப் பொறிமுறையின் செயற்பாடு ஏறக்குறைய நாடொன்றில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் குணாம்சங்களைக் கொண்ட பாத்திரமாகவே இருக்கப்போகின்றது.

அதாவது, வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி மனித உரிமைகள், மனிதாபிமானச்சட்ட மீறல்கள் தொடர்பான சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் உள்ள விடயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து மேலதிக சாட்சியங்கள், விசாரணைகள் ஆகியவற்றை அந்தக் குழு மேற்கொள்ளவுள்ளது.

அத்துடன், ஐ.நா உயர்ஸ்தானிகரின் அலுவலகத்துக்கு இதுவரையில் உள்ளீர்க்கப்படாத குற்றச்சாட்டுக்கள் உடைய சம்பவங்கள் பற்றியும் இந்தக் குழு சாட்சியங்களை திரட்டுவதற்கு முயற்சிக்கும். மேலதிக ஆய்வுகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் வெளிநாட்டு நீதிமன்ற வழக்குகளுக்கு உதவல், ஐ.நா. தீர்மானத்திற்கு அமைவாக, சாட்சியங்களை திரட்டும் இந்தக் குழு, வெளிநாடுகளில் குற்றச்சாட்டுக்களை உடையவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பின், அந்த வழக்கைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக மேம்பட்ட ரீதியிலான சாட்சியங்களை அளிப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளது.

குறிப்பாக தமது சாட்சியங்கள், ஆய்வறிக்கைகளைக் கையளிக்கும். இவ்விதமான செயற்பாடு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர்கள் வெவ்வேறு நாடுகளில் சிக்குவதற்கான சந்தர்ப்பத்தையே ஏற்படுத்துகின்றது.

உதாரணமாகக் கொள்வதாயின், ஊடகவியலாளர் லசந்தவின் படுகொலை விவகாரத்தில் அமெரிக்காவில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கான சாட்சியங்கள் மற்றும் மேம்பட்ட ஆதாரங்களை வழங்குவதோடு நீதிக்காக தொடர்ந்து பணியாற்றவும் உள்ளது.

ஆகவே, நிபுணர்கள் குழுவைக்கொண்ட பொறிமுறை, சட்ட வலுவானதாகக் காணப்படுவதோடு அடுத்து வரும் காலத்தில், இலங்கை தொடர்பில் உலகளாவிய ரீதியில் உருவாக்கப்பட்டிருக்கும் 'சட்டவலையாகவே' பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இலங்கையினுள் பிரவேசிக்க வேண்டிய அவசியமில்லை

இந்த சாட்சியங்களைத் திரட்டும் நிபுணர்கள் வடக்கு கிழக்கிற்கோ அல்லது தென்னிலங்கைப் பகுதிகளுக்கோ நேரடியாக வந்து சாட்சியங்களைப் பதிவு செய்யவேண்டியதில்லை. நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக காணொளி காட்சிகள் உள்ளிட்ட இதர வழிகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு வெளியில் இருந்தே முன்னெடுக்கவுள்ளனர்.

மேலும் ஐ.நா .தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையான நிராகரித்துள்ள நிலையில் சாட்சியங்களை திரட்டும் நிபுணர்கள் உள்நாட்டுக்குள் வருகை தருவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்பது திடமாக வெளிப்படுத்தப்பட்டு விட்டது. எனவே, சாட்சியங்களைத் திரட்டும் குழுவும், இலங்கை அரசாங்கம் நிச்சயமாக ஒத்துழைப்புக்களை வழங்காது என்று கூறுமளவிற்கு நிலைமைகள் உள்ளன.

ஆகவே, ஆட்சியாளர்களிடத்தில் தம்மை உள்நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு இடமளிப்பார்கள் என்றும் அந்த நிபுணர்கள் குழு நம்பவில்லை. ஆகவே, அவற்றின் செயற்பாடுகள் இலங்கைக்கு வெளியில் தான் அதிகளவில் நடைபெறவுள்ளது.

### பொதுச்சபை அனுமதியும் நிதிப்பயன்பாடும்

ஐ.நா.தீர்மானத்துக்கு அமைவாக சாட்சியங்களை திரட்டுதல் உள்ளிட்ட விடயங்களுக்காக 2கோடியே 80 லட்சம் டொலர்கள் செலவழிக்கப்படவுள்ளன. இந்த நிதி பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது. அதன், பின்னரே மேற்படி குழு தனது செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

### உள்ளகப் பரிந்துரைகள்

போர் நிறைவடைந்ததன் பின்னர் அதில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் பரணகம ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில், ஐந்து மாணவர்கள் உட்பட 11 பேரின் கடத்தல், தொண்டு நிறுவன தொழிலாளர்கள் படுகொலை, இறுதிப்போரில் பஸ்களில் ஏற்றிச் சென்றவர்கள் இன்னமும் காணாமலாக்கப்பட்டவர்களாக இருக்கும் நிலைமைகள் இவ்வாறு பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதே போன்று தான் மக்ஸ்வெல் பரணகமவின் அறிக்கையிலும் இவ்விதமான விடயங்களை கொண்டிருக்கின்றன.

ஆகவே அந்தப் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததன் காரணத்தாலேயே தற்போதைய தீர்மானம் வலுவாக மாறியுள்ளது. இந் நிலையில் சாட்சியங்களை திரட்டும் குழு இந்த விடயங்கள் தொடர்பில் மேலதிக ஆய்வுகளையும் செய்யும் என்று எதிர்பார்க்க முடியும். அவ்விதமான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றபோது அடுத்த அமர்வுகளில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் மீளாய்வு சமர்ப்பணங்களும் வலுவடையலாம். மேலும் ஆட்சியாளர்களுக்கே மேலதிக நெருக்கடிகள் ஏற்படலாம்.

### 13ஆவது திருத்தம்

மேலும் இந்த தீர்மானத்தில் 13 ஆவது திருத்தச் சட்டமும், மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டு விட்டது. சமகாலத்தில் சாத்தியப்படக்கூடிய விடயமொன்றாக இருப்பது 13 ஆவது திருத்தச் சட்டமாகும். ஆகவே முதற்கட்டமாக 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்கி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி தமிழ் அரசியல் கட்சிகள் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும். - என்றார்.

# தெற்கில் பௌத்த விகாரைக்குள் இந்துக் கோவில்கள் வடக்கு, கிழக்கு சமூகம் மத்தியில் தவறான புரிதல்!

## என்கிறார் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர்

தொல்பொருள் இடங்களைக் கண்டறிந்து அகழ்வுகள் மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளை கையாள்வதில் பாகுபாடு காண்பிக்கவில்லை. தெற்கைப் போன்று வடக்கு, கிழக்கையும் அணுகுகின்றோம் என்று தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்தார்.

உருத்திரபுரம் சிவன் கோவில் மற்றும் நிலாவரைப் பகுதிகளில் தொல்பொருள் சான்றுகளைக் கண்டறிந்து பாதுகாப்பதற்காகவே அகழ்வாராய்ச்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளனவே தவிர, குறிப்பிட்ட இனத்தையோ மதத்தையோ இலக்கு வைத்து எவ்விதமான முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் அண்மைய நாள்களில் தொல்பொருளியல் அதிகாரிகள் கிளிநொச்சி உத்திரபுரம் சிவன் கோவில் மற்றும் நீர்வேலி நிலாவரைப் பகுதி உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருள் ஆய்வுகளைச் செய்வதற்கு முயற்சிகளை எடுத்திருந்த நிலையில் அதற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பின் வடிவமாகவே இந்த விடயத்தைப் பார்ப்பதாக அந்த முயற்சிகளுக்கு எதிராக போராடிய மக்களும் அரசியல், சிவில் சமூகத் தரப்பினரும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் தொல்பொருளியல் திணைக்களப் பணிப்பாளரிடத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது திணைக்களத்தின் பிரதான பணியாக இருப்பது இந்த நாட்டின் வரலாற்றுத் தொன்மம் வாய்ந்த பகுதிகளை அடையாளம் காணலும் முறையாக பாதுகாத்தலும் ஆகும்.

அப்பகுதிகளிலிருந்து மீட்கப்படும் பொருள்களை பத்திரப்படுத்தி வரலாற்றுத் தொன்மங்களை அழிவுறாது பேணுவதே எமது கடமையாகின்றது. அந்தப் பணியையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். இதில் எவ்விதமான இன, மத ரீதியான பாகுபாட்டைக் காண்பிக்கவில்லை. தெற்கில் எவ்வாறு புராதனப் பகுதிகளை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோமோ அதே போன்று தான் வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் காணப்பட்ட அசாதாரண நிலைமைகளால் அங்குள்ள தொல்பொருள் பகுதிகள் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது அதற்காக விசேட நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிலபகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்படாமை உள்ளிட்ட பிரச்சினைகளும் உள்ளன. எவ்வாறாயினும் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தொல்பொருள்களும் இடங்களும் உரிய வகையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது கரிசனை ஆகும்.

மேலும் கோவில்களில் தொல்பொருள்களை அடையாளப்படுத்துவதற்கான முயற்சிகள் ஒரு மதத்தை இலக்கு வைத்த நடவடிக்கை அல்ல. தென்னிலங்கையில் பௌத்த விகாரைகளுக்குள் இந்துக்கோவில்கள் உள்ளன.

ஆகவே, அவ்விதமாக காணப்படுவதால் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. எனவே தொல்பொருளியல் செயற்பாடு தொடர்பாக தவறான புரிதலை வடக்கு கிழக்கு சமூகத்தினர் கைவிட வேண்டும். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரசுடன் பேசுவதற்கு நாம் தயார் ஜெனிவாத் தீர்மானம் தடையல்ல!

## என்கிறார் சுமந்திரன்



இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ராஜபக்ஷ அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் அரசாங்கத்துடனான பேச்சுக்கு ஒரு தடையாக அமையாது என்றும், அரசாங்கம் அனைத்து மக்களுக்குமான புதிய அரசமைப்பொன்றை ஸ்தாபிப்பதற்கு விரும்பினால் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதைத் தவிர்த்துச் செல்ல முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள் தொடர்பிலானதீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பேச்சுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் இறங்கி வருமா என்று வினவியப் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கு அவர் அளித்துள்ள பதிலில் மேலும் தெரிவித்த விடயங்களும் 13 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக எழுப்பிய வினாக்களுக்கு அளித்த பதில்களும் வருமாறு:-

தற்போதைய சூழலில் ஆயுத பலம் இல்லை. ஆகவே பேச்சுகள் ஊடாகவே அனைத்து விடயங்களையும் கையாள வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் இனப்பிரச்சினை தொடர்பாக நாம் அரசாங்கத்துடன் பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராகவே உள்ளோம். பேச்சுகளின் ஊடாகவே அடுத்தகட்ட நகர்வுகளைச் செய்யமுடியும்.

அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு ஜெனிவா தீர்மானம் ஒரு தடையாக அமையாது. தற்போதைய நிலையில் புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்துள்ளார்கள். அதற்காக அமைக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவிடத்தில் நாம் எமது முன்மொழிவுகளைச் செய்துள்ளோம்.

மேலதிகவிடயங்கள்தேவைப்பட்டால் அவர்களுடன் தொடர்ந்தும் பேசுவதற்கு தயாராகவே உள்ளோம். ஆகவே, அரசாங்கம் அனைத்து மக்களுக்குமான புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதாக இருந்தால் எம்முடன் பேச்சுகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து செல்ல முடியாது. மேலும் அரசாங்கம் எம்முடன் பேச்சுகளைச் செய்வதற்காக இறங்கி வருகின்றது என்றெல்லாம் கருத வேண்டியதில்லை. - என்றார்.

கேள்வி:- தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் மாகாண சபை அலகுமுறைமையையும் ஏற்றுக்கொள்ளச்செய்வதற்கான சமிக்ஞையையே ஐ.நா.தீர்மானம் மற்றும் பேரவையில் இந்தியா வெளிப்படுத்தியுள்ளது என்று கருதலாமா?

பதில்:- தமிழர்களின் அரசியல் அபிலாஷகளை முழுமையாக பூர்த்திசெய்யவில்லை என்பதால் நாம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அதிகாரப்பகிர்வுக்கான அடிப்படையாக 13 ஆவது திருத்தச்சட்டமே காணப்படுகின்றது.

அதன்பிரகாரமே மாகாண சபை முறைமை தோற்றம்பெற்றதோடு காணி, பொலிஸ் அதிகாரங்கள், வடக்கு, கிழக்கு இணைவதற்கான நிலைமைகள் என்பன ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, 13 ஆவது திருத்தம் முழுமையானதாக இல்லை என்பதற்காக அதிலுள்ள அடிப்படைகளை மறந்து முழுமையாகத் தூக்கி எறிவது முட்டாள்தனமான விடயமாகும்.

13ஆவது திருத்தச்சட்டத்தையே முழுமையாக அகற்றுவதற்குரிய நகர்வுகள் உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் சூழலில் தான் அதனை முழுமையாக அமுலாக்குவதற்கான அழுத்தத்தை இந்தியா வெளிப்படையாக வழங்குகின்றது. அதனடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுலாக்கப்பட்டு அதற்கு அப்பால்சென்று அதிகாரங்கள் அர்த்தமுள்ளதாகப் பகிரப்பட வேண்டும்.

கேள்வி:- ஒற்றையாட்சிக்குள் 13 ஐ முழுமையாக அமுலாக்கப்படுவதால் பயனில்லை என்ற நிலைப்பாடும் தமிழ் அரசியல் கட்சிகளிடத்தில் உள்ளதே?

பதில்:- சரி, அவர்களின் கூற்றுப்படி 13 தேவையில்லை என்றால் அது தற்போதைய நிலைமையில் முழுமையாக அகற்றப்படும். அவ்வாறு அகற்றப்பட்டால் அடுத்த தெரிவு என்ன?

ஆயுதரீதியான பலம் இல்லாத நிலையில் பேச்சுகள் மூலமாக அரசியல் தீர்வை நோக்கி பயணிக்க வேண்டிய நிலையில், இருப்பதைக் கைவிட்டு புதிய கட்டமைப்பை உருவாக்குவது எந்த வகையில் சாத்தியமாகும். இவ்வாறு பிற்போக்குத்தனமாக சிந்திப்பதே அடைந்துள்ள இலக்குகளை இழக்கச் செய்யும் முட்டாள்தனமாகும். - என்றும் கூறினார்.

# துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் கைது!

காலி, பதியதலாவை மற்றும் மீகஹாவத்த ஆகிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**பதியத்தலாவை**

பதியத்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வெளிநாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதியத்தலாவை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குழல் – 12 ரக துப்பாக்கியும், அதன்10 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

**காலி**

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போம்பே பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போம்பே பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

**மீகஹாவத்த**

மீகஹாவத்த பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மாஹேன சியம்பலாபே பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார்முன்னெடுத்துவருகின்றனர்.

# பொலன்னறுவையில் யானை தாக்கு: தாயும், மகனும் வைத்தியசாலையில்!

பொலன்னறுவை, தெஹியத்த கண்டி பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி பெண்ணொருவரும் அவரது மகனும் காயமடைந்துள்ளனர்.

திங்கட்கிழமை காலை 6.45 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அரலகன்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த தரம் 02 இல் கல்வி பயிலும் மாணவனும், அவரது 25 வயது தாயாரும் சிகிச்சைக்காக தெஹியத்த கண்டி பிராந்திய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவனைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் வேளையிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது.

# கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு வவுனியாவில் நினைவு நிகழ்வு!





வவுனியா, மார்ச் 29

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் நினைவு தினம், வவுனியா நகரப் பகுதியிலுள்ள கம்பனின் உருவச்சிலைக்கு அடியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

குறித்த நிகழ்வு, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கம்பனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, அங்கு வருகை தந்திருந்த அனைவராலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் பார்த்தீபனால் சிறப்புரையும் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், செட்டிகுளம் பிரதேசசபை தவிசாளர் ஜெகதீஸ்வரன், கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் பார்த்தீபன், நகரசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விபத்துக்களில் 11 பேர் சாவு!



வீதி விபத்துக்கள் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

வீதி விபத்துக்கள் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களுள் எட்டு பேர் நேற்று இடம்பெற்ற விபத்துகளிலும், ஏனைய மூவரும் இதற்கு முன்னர் ஏற்பட்ட விபத்துகளில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வர் பாதசாரிகள் மூன்று பேர் மற்றும் ஏனைய வாகனங்களில் பயணித்த நால்வர் உள்ளடங்குகின்றனர்.

இந்த காலப்பகுதிகளில் இடம்பெறும் பெரும்பாலான வாகன விபத்துகளுக்கு சாரதிகளின் கவனக்குறைபாடு, தூக்கம், வீதிகளில் காணப்படும் குழறுபடிகள் தொடர்பில் கவனம் செலுத்தாமை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துகின்றமையே காரணமாக விளங்குகின்றன.

சாரதிகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பலர் சுற்றுலா பயணங்கள் செல்வதற்குத் தீர்மானித்திருக்கலாம்.

இவ்வாறு செல்லும் போது வாகன சாரதிகளுக்கு மதுபானங்களை வழங்குவதை தவிர்த்துக் கொள்வதுடன், அவர்களை எப்போதும் கவனமாக வாகனத்தை செலுத்துமாறு அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Great Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org